Forwarded

GAFA taxஎன்பது பற்றி இன்று நாம் தெரிந்து கொள்வோம். அரசாங்கம் செயல்பட வேண்டும் என்றால் அதற்கு வருவாய் நிச்சயம் இருக்க வேண்டும். வருவாய் தரக்கூடிய வழிகளில் ஒன்று வரி. ஆங்கிலத்தில் tax,toll, tarrif,cess, custom, excise,duty என பல வார்த்தைகள் உண்டு. இதனுடைய அர்த்தம் அரசுக்கு வருவாய் தரக் கூடிய வழிகள். சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் a source of revenue to the government. வரி விதிப்பு என்பது இரண்டு வழிகளில் அடங்கும். 1. நேர்முக வரிவிதிப்பு Direct taxation 2. மறைமுக வரி விதிப்பு indirect taxation. வரி வருவாய் இல்லையென்றால் அரசாங்கம் எளிய மக்களுக்காக உருவாக்கும் திட்டங்களை செயல்படுத்த இயலாது. உலகமயமாக்கலின் விளைவாக பல அயல் நாட்டு கம்பெனிகள் ஒவ்வொரு நாட்டிலும் செயல்படுகின்றன. அந்த கம்பெனிகள் ஒவ்வொரு நாட்டினுடைய மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரவேற்பும் பெற்றுள்ளன. இன்றைய உலகில் இணையத்தைப் பயன்படுத்தாதவர்கள் மிக குறுகிய சதவீதத்தினரே.. அதேபோல் ஆன்லைனில் வியாபாரம் மேற்கொள்ளாத மக்கள் இல்லை என்ற நிலையை நாம் பார்க்கிறோம். GAFA என்பது Google,Apple, Facebook, Amazon நிறுவனங்களின் முதல் எழுத்துதான்.

Scanned with CamScanner

இல்லையென்றால் அரசாங்கம் எளிய மக்களுக்காக உருவாக்கும் திட்டங்களை செயல்படுத்த இயலாது. உலகமயமாக்கலின் விளைவாக பல அயல் நாட்டு கம்பெனிகள் ஒவ்வொரு நாட்டிலும் செயல்படுகின்றன. அந்த கம்பெனிகள் ஒவ்வொரு நாட்டினுடைய மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரவேற்பும் பெற்றுள்ளன. இன்றைய உலகில் இணையத்தைப் பயன்படுத்தாதவர்கள் மிக குறுகிய சதவீதத்தினரே.. அதேபோல் ஆன்லைனில் வியாபாரம் மேற்கொள்ளாத மக்கள் இல்லை என்ற நிலையை நாம் பார்க்கிறோம். GAFA என்பது Google,Apple, Facebook, Amazon நிறுவனங்களின் முதல் எழுத்துதான். இந்த நான்கு நிறுவனங்களும் உலகில் ஏறக்குறைய அனைத்து நாடுகளிலும் இயங்குகின்றன. இது அனைவருக்கும் தெரியும். இணையத்தின் வாயிலாக தரவுகள் data பெறப்படுகின்றன. இந்த தரவுகளை வர்த்தக ரீதியில் பயன்படுத்துகின்றனர். உலகில் முதன்முதலாக பிரான்ஸ் நாட்டில் ஏப்ரல் 2019 முதல் இந்த நான்கு நிறுவனங்களும் தங்களது annual digital turnoverல் 3% வரியாக அரசிற்கு கட்டவேண்டும் என தீர்மானித்துள்ளனர். இதுதான் GAFA tax என்பது. இந்த வரி விதிப்பின் மூலம் பிரான்ஸ் அரசாங்கத்திற்கு கணிசமாக வருவாய் வரும் என எதிர்பார்க்கின்றனர். இது வெற்றி பெறும் பட்சத்தில் உலகில்

Scanned with CamScanner

அரசாங்கத்திற்கு கணிசமாக வருவாய் வரும் என எதிர்பார்க்கின்றனர். இது வெற்றி பெறும்  பட்சத்தில் உலகில் மற்ற நாடுகளும் இதுபோன்று செயல்படுத்த தயங்கமாட்டார்கள். விளைவு இது போன்ற நிறுவனங்கள் தங்கள் பொருட்கள்/ சேவைகளின் விலையைக் கூட்டி நுகர்வோர் தலையில் வைத்து விடும் என்பது மறுக்க இயலாத கூற்று. கால ஓட்டத்தில் அனைத்து நாடுகளும் இணையத்தை இலவசமாக ஆக்கிவிடும் என்பது அனைவராலும் எதிர்பார்க்கப்படுகின்ற ஒன்று.

ஒரு காலத்தில் ரேடியோ வீட்டில் இருந்தால் அதற்கு வரி கட்ட வேண்டும். தற்பொழுது ரேடியோ(All India Radio, FM) அரசாங்க தொலைக்காட்சிகள் (doordarshan) போன்றவை free to air என்ற அடிப்படையில் இலவசமாக செயல்படுகின்றது. அதேபோல் மக்கள் அனைவருக்கும் இணையம் இலவசமாக கிடைக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை. தேர்தலில் பெரிய கட்சிகள் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் எத்தனை G B இலவசமாக தருவோம் என தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி தந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

விழித்திருப்போம்.. தனித்திருப்போம்...
அரசாங்கம் சொல்வதைக் கேட்டு நடப்போம்..

தயாரிப்பு:-
முனைவர் ப.பாஸ்கரன்
இணைப்பேராசிரியர்
17-04-2020
★ 10:36 am

Scanned with CamScanner